ஓலை 44 | ஓசை 156 | மடங்கல்(ஆகத்து) 2023

# அகர முதல இலக்கியப் பேரவை

அகழும் தமிழே!
முதலும் தமிழே!!



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்: அகர முதல இலக்கியப் பேரவை (ம) சிவம் அறக்கட்டளை

அகர முதல

உரக்க சொல்வோம்

# அறிவோம் வள்ளுவம்!



**கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த**
**ஒன்றுநன் றுள்ளக் கெடும்**

முன்பு நன்மை செய்தவரே பின்பு நம்மைக் கொலை செய்வது போன்ற தீமையைச் செய்தாலும் அவர் முன்பு செய்த ஒப்பற்ற நன்மையை நினைத்த அளவில் அத்தீமை மறையும்.

**Translation:**

Effaced straightway is deadliest injury,
By thought of one kind act in days gone by.

**Explanation:**

Though one inflict an injury great as murder, it will perish before the thought of one benefit (formerly) conferred.

/Aagaramuthalaa

அகர முதல இலக்கிய பேரவையில் இணைய-9597887847

# அகர முதல
## இலக்கியப் பேரவை

அகமும் தமிழே!
முதலும் தமிழே!!

## நிர்வாகக்குழு

செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்
சிவம் அறக்கட்டளை,முகையூர்

## இதழாசிரியர்கள்

அ.வில்சன்
குமர.தர்மசீலன்

## வடிவமைப்பு

அ.வில்சன்


## அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர், டவுன் ஸ்டேசன் தென்புறம்,
மயிலாடுதுறை - 609001

Aagaramuthalaa www.அகரமுதல.com aagaramuthala@gmail.com

# பேதைமை அகற்று

## பா வகை: தங்கச் சிந்து

அச்சமெனும் இருளில் அண்டிடுதல் தகுமோ
உச்சம் தொட்டிட உடைத்திடு மடமை
நச்சாய் அறியாமை நலிவைப் புகுத்தும்
மிச்ச மின்றியே - என்தங்கமே
அச்சம் உதரடி

அறிவும் எதுவென அறிந்திடா திருப்பதா
அறிவோம் தெளிந்தே அறியாமை கொளுத்து
சிறையில் அதுவும் சிறப்பாய் அடைக்கும்
முறையாய் முயன்றுதான் - என்தங்கமே
நிறைகள் பயின்றிடு

அறியாமை அகற்ற அறிவுக்கண் திறக்கும்
செறிவுடன் வாழ்வும் செவ்வனே நடக்கும்
சிறகை விரிக்க திசைகள் பிறக்கும்
உறைந்திடா நல்லறிவும் - என் தங்ஙமே
பறையாய் முழங்கிடும்




கவிஞர் பூர்ணிமா சங்கர்,கோயமுத்தூர்

# எதிர்காலம் எழிலாகும்

சறுக்கல்கள் எல்லாம் சலிப்படைய அல்ல
சளைக்காமல் நீயும் முயற்சித்து வெல்ல

திண்ணமான நெஞ்சோடு முன்னோக்கி ஓடு
எண்ணத்தில் இலக்கு ஓங்கியொலிக்கப் பாடு

விழுகின்ற போதெல்லாம் புதையாதே நீயும்
எழுந்து முன்னேற தோல்வியும் தேயும்

இயலாமை யென்று தயங்காதே இன்று
முயலாமை நீங்கிட வெல்லலாம் நன்று

தடைக்கற்கள் கண்டு ஏனுனக்குத் துயரம்
படிக்கற்களாக்கிட நீ காணப்பாய் உயரம்

நலமான எண்ணம் வலிமையாய்ப் பேணு
வளமான எதிர்காலம் உருவாகக் காணு



கவிஞர் மக்கொனையூராள்

# சந்திரயான் -1,2,3

இசுரோவின் விண்வெளித் திட்டம்
இந்திய நிலாத் தேட்டத் திட்டம்.
அப்துல் கலாம் ஐயாவின் கனவு
அப்படியே வேரூன்றி ஆனது நனவு.

விண்வெளி ஆய்வுமையத்தின்
விண்கலஉறுப்பு வடிவமைத்த
மயில்சாமி அண்ணாதுரையின்
மாண்புறு சிந்தனையால்

நிலா வட்டணைக் கலத்தோடு
தரையிறக்க மொத்தல்கலமும்
மொத்தல்கல ஆய்வுக்கருவியோடு
சுற்றுக்கலமும் அனுப்பி

நிலவில் நீர் கண்ட முதல்
நிலவுக்கலனாய்ச் சந்திராயன்-1
உலவிட இந்தியாவின்
நிலவுமனிதர் ஆனாரவர்.

அன்னாரின் வழிகாட்டுதலால்
இன்முகத்தோடு விண்கலத்தை
விண்ணில் செலுத்த
விண்கலம் வடிவமைத்தே

செலுத்துகலத் தரையிறங்கியோடு
செலுத்தினார் வனிதா முத்தையா.
தரையிறங்கியின் மென்மை
தரையிறக்கத் தடவழி விலகிட

வெற்றிவாய்ப்பு
சற்றே நழுவினாலும்
இராக்கெட் பெண்மணியென்றே
இசையோடு பேசப்பெற்றார்.

விண்கலரோவர் வெடிக்கும் முன்
விண்ணிலிருந்து எடுத்தது படம்.
படத்தின் தன்மையாலே
பாங்காய் நிறுவப்பட்டதே

இப்போதைய சந்திரயான்-3
இம்முறை மூளைசெயல்பாடோ

வீரமுத்துவேல் அவர்களது.
வீரமுத்துவேல் கையாண்ட
அதிரடி தொழிற்நுட்பம்
அதிர்வுகளைக் கட்டுப்படுத்தியே

தரையிறங்கியைப் பாதுகாப்பாய்த்
தரையிறக்கி இலச்சனை
பதித்தே யாரும்
பாராத சந்திரனின்




தென்புலத்தைத் தடவியே
தென்புலத்திருந்து
ஆய்வகமாய் ஆறுசக்கரங்களோடு
ஆடியோடும் தானூர்தி!

தென்புலத்தில் இறங்கியே
தென்புலத்தார்க்குச் சேர்த்தது
பழியில்லாத நிலைத்த
அழியாதப் புகழை!

கவிஞர் செ.கலைவாணி,மெல்போர்ன்

# போயே போச்சி

பீயும் மூத்திரமா
ஒரே எடத்துல நாலு வர்சமா
நோயில வதபட்ட தாத்தா
நேத்து விடியலில்
போய் சேர்ந்துட்டாரு.
இன்னிக்கி
குழித்தோண்டிப் பொதச்சி
உடன்பாலும் வெச்சி முடிச்சிட்டோம்.
ஒம்பதான் நாளு
ஆத்தா தாலியறுக்க
மீசய செரச்சிகிட்டு தலப்பா கட்டி
கருமாதி நடத்தி கறிச்சோறு
தின்னதும் தாத்தன் செத்த
தீட்டும் போச்சி
துக்கமும் போயே போச்சி!



கவிஞர் பாரியன்பன் நாகராஜன்,குடியாத்தம்

# விடுதலை

யாருமில்லா அந்திப்பொழுதில்
கூடுதிரும்பும் தாய்ப்பறவையின் வருகையை
ஏக்கத்தோடு எதிர்பார்த்து
திசையெங்கும் தேடும் சிறுகுஞ்சுகளாய்

வகுப்பறை ஜன்னல் வழியே
வெளியேறும் எல் கே ஜி
சிறுமியின் மனம்
ஆவலோடு தேடுகிறது
பள்ளிக்கூட
கூண்டினில் அடைத்துப்போன
ஆட்டோ ஓட்டுநரே
திரும்பி வந்து வழங்கிடும்
விடுதலைப் பொழுதினை.



கவிஞர் கோவை ஆனந்தன்,கிணத்துக்கடவு

# பிரஜைகள்



நாளைய தலைமுறை நாம் என்பார்
நாட்டை உயர்த்திடும் தூண் என்பார்
நன்றாக படித்து பட்டம் பெற்றிடுவார்
நன்கு உழைத்து காசி சேர்த்திடுவார்
நாலுகாசி கையில் சேர்த்து கண்டம் விட்டு
கண்டம்தாண்டி வேறுநாடு போயிடுவார்
ஏனென்று கேட்கையிலே அரசாட்சி முறையில்லை
பொருளாதாரம் சரியில்லை சரியான கல்வியில்லை
வாழ்வதற்கு வழியில்லை நாட்டின்நிலை மாறுவதில்லை
என்றுபல காரணங்கள் வாய்கிழிய உரைத்திடுவார்
குடும்பத்தை கூட்டிக்கொண்டு குடியுரிமை வாங்கிடுவார்
வெளியாட்டு மோகத்தால் உள்நாட்டை மறந்திடுவார்
வல்லரசு நாடுகளின் வளர்ச்சிக்கு உழைத்திடுவார்
கைகட்டி பிழைத்திடுவார் அதைகௌரவமாய் நினைத்திடுவார்
வலைத்தலத்தில் அலைந்துகொண்டு விமர்சனங்கள் பேசிடுவார்
தாய்மொழி மறந்து கலாச்சாரம் மறந்து
தாய்தந்தை மறந்து தாய்நாட்டையும் மறந்திடுவார்
சொந்தவூரை சுற்றிப்பார்க்க சுற்றுலாப் பயணியாவார்
இவ்வாறு நடைக்கையிலே எவ்வாறு நாடுவளரும்?

கவிஞர் கோ.தனுசன்,மட்டக்களப்பு(இலங்கை)

# அந்தகாலமும் இந்தகாலமும்

படமெடுத்து பழையதானது அந்தகாலம்
படமெடுத்து பாரெல்லாம் பகிர்வது இந்தக்காலம்
படமெல்லாம் புத்தகமாக அந்தக்காலம்
படமனைத்தும் பட்டியலாக இந்தக்காலம்

பார்க்குமிடமெல்லாம் படமாகவே அந்தகாலம்
பார்ப்பதெல்லாம் படமாகவே இந்தகாலம்
பார்த்து பார்த்து மகிழ்ந்தது அந்தகாலம்
பார்த்து பார்த்து அழிப்பதே இந்தகாலம்

பிடித்தவரெல்லாம் படமாக மனதில் வணங்கியது அந்தகாலம்
பிடிப்பவரும் படத்திற்குள்ளே இந்தகாலம்
பிறகு பார்ப்பதற்கே படமனைத்தும் அந்தகாலம்
பின்னால் நின்று நடப்பதை படமெடுப்பதே இந்தகாலம்

பீலியாகவே பல இடங்களில் அந்தகாலம்
பீழையிழைக்கவே பிறருக்கு இந்தகாலம்
பீலிக்குஞ்சமாகவே சுவற்றிலே அந்தகாலம்
பீற்றிக்கொள்ளவே படமெடுப்பதே இந்தகாலம்




புகழ்பெற்றதை படத்தில் காண்பது அந்தகாலம்
புகார் அளிக்கவே படமெடுப்பதே இந்தகாலம்
புகையறையில் படம் அச்சாவது அந்தகாலம்
புடித்தவுடன் கையிலே படம் இந்தகாலம்

தனிக்குடும்பம்



தனித்தனிக்குடும்பம்



பூஞ்சோலையாக படம் மகிழ்வித்தது அந்தகாலம்
பூசல் ஏற்படுத்தவே படமெடுப்பது இந்தகாலம்
பூரணையாய் ஜொலித்தது அந்தகாலம்
பூர்வோத்தரம் படைப்பதே இந்தகாலம்

பெயரும் புகழும் படமாகவே அந்தகாலம்
பெயரன்,பெயர்த்திகள் படத்தில் காண்பது இந்தகாலம்
பெற்றோரை படத்தில் வணங்குவது அந்தகாலம்
பெருங்காடுவரை படமெடுத்து போடுவதே இந்தகாலம்

கவிஞர் நீலா சுபாஷ்,ஆக்கூர்

# முட்கள்

மொழியின் தூரிகை கொண்டு
மனதை வரையத் தொடங்குகிறாய்.
ஒப்பனைகளை ஒவ்வொன்றாய்
இடத்தொடங்குகிறாய்.
ரணங்களின் வரிசைகள்;
வலிகளின் வியாக்கியானங்கள்;
கீறல்களின் எதிரொலிகள்.
எல்லாவற்றையும்
அரிதாரத்தில் மறைத்துக்கொள்கிறாய்.
ஏன் இந்த அவலம்?
உள்ளது உள்ளபடியே கூற;
உள்ளது உள்ளபடியே வரைய
ஏன் கூச்சம்?
ஒப்பனை கலைத்து
உன் முகம் காட்ட
ஏன் உன்னால் முடியாது?
வரட்டு சமூகத்தின்
குருட்டு நம்பிக்கைகளில்
பயந்து நிற்கிறாய்.
கவிதைகளில் உள்மனதைக்
காணாமல் செய்கிறாய்;
காயங்களை மறைக்கிறாய்.
காற்றில் அசையும் தீபம் போல விழுந்தும் மடிந்தும்
உன் வீரத்தை இழக்கிறாய்.
கூர்வாளை நேராகப் பிடிக்க
வலிமை உண்டாயினும்
உறைக்குள்ளே பாதுகாப்பாய் வைத்திருக்கிறாய்.



நீயும் முடிவில்
சாதாரணமாய்
வாழவே ஆசைப்படுகிறாய்!

ரோஜாக்களை மட்டுமே நீ கருத்தில் கொண்டால்
முட்களை ஏந்திக் கொண்ட தண்டுகள்
என்ன செய்வது?

கவிஞர் மரு ஜலீலா முஸம்மில்,ஏறாவூர்(இலங்கை)

# நாணம் கொள்ளும் மங்கை

கண்ணுக்கே மையெழுதும்
கலைந்த கார்முகில்

கன்னத்தில் வழியுதே
கதிரவனின் புன்னகையே

சாயங்காலச் செம்மையில்
சாய்ந்தாடச் சொல்லுதே

ஓரவிழியின் பார்வையில்
ஓராயிரம் கதைகளே

வெண்ணிலவைக் கண்ட
வெண்ணிற அல்லியும்

விரிந்தே மலர்நதே
விந்தையாகிடும் காட்சிகளே

சூனியக்காரியின் மந்திரத்தில்
சூதாட்டத்தில் இழந்த

பொருளின் மொத்தமாக
பெண்ணின் மௌனத்தோடு

நாணி நின்றாளே
நாணத்தில் கோலமிட்டாளே



கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# காதலால் வாழ்ந்திடுவோம்

ஆசை மச்சான் உன்னைத் தேடி
ஆலமரத்தடியில் ஆசையாக நானுந்தானே
அத்தை மக நிக்குறேனே!

பூப்போட்ட தாவணியில்
புத்தம்புது பூவாட்டம்
புன்னகையோடு நான் நிற்க!

மாமன் மகனாய் வந்தவனே
மச்சானே நீயுந்தான்
மயங்கித்தான் நின்னாயே!

முறைப்பொண்ணு நானுன்னு
முறையோட நீ வீட்டுக்கு வர
முறைச்சாரே எங்கப்பா!

என்ன பண்ணன்னு தெரியாம
என் மனசுந்தான் குழம்ப
என் மனசைப் படிச்சவரே!



நானிருக்கேன்னு சொல்லித்தான்
நாணத்தில் சிவந்தவளை
நானில்லை நாமுன்னு சொன்னவரே!

காலமது சேர்த்து வைத்திட
காதலதும் கைகூடுமோ
கணவனாக நீ வந்திட!

ஏங்கி ஏங்கி நிதம் தவிக்க
ஏங்காதே என நீ கலங்க
ஏழேழு ஜென்மத்துக்கும் இதுபோதுமே!

எங்கப்பா மனசுந்தான் மாறணுமே
என் மனசும் புரியணுமே
என் மச்சானையும் ஏற்கணுமே!

கடவுள் புண்ணியத்துல
கணவனா நீ வந்தா
கரம் கோர்த்து நடந்திடுவேன் உன்னுடனே!

காதலனா நீயும் மனைவியா நானும்
காதலியா நானும் கணவனா நீயும்
காதலால் வாழ்ந்திடுவோம் அகிலத்திலே!

கவிஞர் இரா.கோமதி,பொள்ளாச்சி

# அகிலம் போற்றும் ஆசான்கள்

அன்பை கற்று தரும் ஆசான்
ஆருயிராய் பாடத்தை போதிக்கும் ஆசான்
இனிமையாக எங்களிடம் பேசும் ஆசான்
ஈகையைச் சொல்லி தரும் ஆசான்
உலகைச் சுற்றிக் காட்டும் ஆசான்
ஊரார் போற்ற மகிழும் ஆசான்
எளிமையான தோற்றம் கொண்ட ஆசான்
ஏணியாய் ஏற்றி விடும் ஆசான்
ஐயத்தை போக்கிட வந்த ஆசான்
ஒற்றுமையை கற்றுக் கொடுக்கும் ஆசான்
ஓடி ஓடி உழைக்கும் ஆசான்
ஔவை மொழியையும் கற்ற ஆசான்
தன் குழந்தையாக பார்க்கும் ஆசான்
மழலையோடு மழலையாக அமரும் ஆசான்
உணவை எல்லாம் பகிர்ந்திடும் ஆசான்
மாணவனின் புரிதலோடு பயணிக்கும் ஆசான்
கரும்பலகையோடும் சுண்ணக்கட்டியோடும்
வகுப்பறையை மூச்சாய்
கொண்டு மாணவனின் நலனில் அக்கறையோடு
பாடம் சொல்லி தரும் ஆசான்கள்
அனைவரும் ஒவ்வொரு மாணவனின் உள்ளங்களில்
என்றுமே போற்றப்பட வேண்டியவர் என்றால்
மிகையாகாது கற்பித்து தரும் ஆசானை
வாழ்வில் எந்த இடத்தில் பார்த்தாலும்
தலை வணங்குவோம் சிறப்பு செய்வோம்



கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம்,நாகர்கோவில்

# சிலப்பதிகாரம் (ஏழு)

7. கானல் வரி

1 மாதவி யாழ் இசைத்தல் .

மாதவி மணப்பெண் போல் அழகு மிளிர யாழ் மீட்டினாள்
காதலன் மயங்க எட்டுவகை கலை நுட்பமாக யாழ் இசைத்தாள்
ஆதவன் வரும் வரை எட்டு வகை இசைக் கூறுகளில் பாடினாள்
சாதகமாக யாழ் மீட்ட கோவலன் அதனை வாங்கி வாசித்தான்

2. கோவலன் யாழ் இசைத்தல்

வட நாடு சென்று சோழன் கங்கையை தன் பால் கொண்டான்
தடம் மாறாமல் மக்களின் மூச்சாக இருக்க வாழி காவேரி என்றான்
கடல் சூழ்ந்த புகார் மக்களுக்குத் தேவையான அனைத்தும் கொடுத்து
இடம் மாறாமல் மாதரார் கற்பு நெறி போற்றி வாழும் புகார் வாழ்க

3. கோவலன் பாடல் கலைத்திறன்:

கடற்கரை மணலில் உலரும் மீன்களை கவர வரும் பறவைகள்
சுடர்விடும் மணிகள் அணிந்த கன்னிகள் காவல் காத்து நிற்க
அடர்ந்த பூங்கொத்துகளை கைகளில் ஏந்தி பறவைகள் விரட்ட
திடமான மலர்கள் வாசம் எங்கும் வீச மதி மயங்கினான் அவன்

மலர் கரங்களால் பறவைகள் விரட்டும் குமரிகள் கண்டான்
பல வண்ண ஆடைகளில் அவர்கள் வளைவுகள் காற்றில் அசைய
சிலரின் அழகில் பிரமித்து கண்களில் படாமல் இருந்தது எப்படி
வலம் வரும் இவள் பெண்தானோ? காணாதது என் தவறல்லவா ?



4. கோவலன தன் காதலி யாழில் அசத்தல்

பருத்த மார்பகங்கள் , நிலா முகம் , மின்னல் இடை கவர்ந்திழுக்க
மருந்தில்லா காதல் நோயில் ஆழ்த்தி என்னை இடர் செய்கிறாளே!
விருந்துக்கு அழைக்கும் அவள் கண்களை மறக்க முடியலையே
சருகான என்னை அவள் அங்கங்கள் அலைகழிக்க, ஐயகோ!

5. கோவலனிடம் யாழை வாங்கி மாதவி பாடுகிறாள்.

ஆற்றின் இரு கரைகளிலும் பூ ஆடை உடுத்தி பாய்ந்து ஓடுகிறாள்
வீற்றிருக்கும் சோழனின் நீதியில் மகிழும் காவிரியே நீ வாழ்க
போற்றிப் புகழும் வெண் முத்துக்களை அள்ளித்தரும் கடலே
கூற்றுவன் அஞ்சி ஓடும் நன் மக்கள் வாழும் புகார் நகரே வாழ்க

6.மாதவி தன் காதலை யாழில் அசத்தல்:

பூக்களை மொய்க்கும் வண்டுகளே பூவின் கனவை நீ அறிவாயா?
தூக்கம் வராமல் தவிக்கும் என் தலைவன் கனவில் வருவது யார்?
ஏக்கத்தில் தவிக்கவிட்டுச் சென்ற அவனைக் கண்டால் வரச்சொல்
நீக்கமற தன்னைக் கொடுத்து என்னை எடுக்க வருவானா தோழி?

7. தலைவன் இல்லாமல் அனல் புழுவாக பாடுகிறாள்

அலைகள் மணலில் தேடுவது என்ன? தலைவனைத் தேடுகிறேன்
தலைவியை விட்டு தேரில் சென்ற பாதை அலைகளால் அழிந்தனவே
தலைவனைக் கூடாத என் உடல் மெலிதாக மேகலை கழன்றதே
கலையாமல் சென்று அவனை வரச்சொல் கைக்கிளையில் வாடுகிறேன்.

8. கோவலனின் கோபம் :

என் பாட்டுக்குப் பதில் இல்லை மாற்றானை நினைந்து வாடுகிறாளே
என்மீதுள்ள காதல் நீர்த்துப் போனதே , இனி இவள் தேவையா? என்ன!
முன் செய்த ஊழ்வினை யாழின் மீது அமர்ந்து உருத்தது ஆகலின்
தன்வழி தனி வழி என்று மாதவியை விட்டு விலகினான் கோவலன்
.

(தொடரும்)


கவிஞர் ந.திருக்காமு

# விதியும் மதியும்

பூமி பிறந்தது இங்கு விதியாலே
பூமி ஆனது மனித உயிராலே
பூகம்பமும் கிளம்புது இந்த விதியாலே
பூமியை ஆள்கிறான் மனிதன் மதியாலே

விதி செய்தது சதிகள் வாழ்விலே
விதவிதமாய் ஆட்டம் ஆடுது
விரக்தியால் மனிதன் கீழே விழ
விளையாட்டை எண்ணிச் சிரிக்கிது விதி

சூனியம் செய்து சூனியக்காரியாக ஆடுது
சூத்திரம் நிறைந்த வில்லனாய் பாயுது
சூரியனாய் எறித்து சுட்டிட வைக்குது
சூதாட்டமாய் ஓட ஓட விரட்டுது



மண்ணில் பிறந்தவனை மண்டியிட வைக்கிது
மணக்கும் வாழ்வை சுரண்டி பார்க்குது
மரணம் வரும் வரை துறத்துது
மரண வாசலை மரணிக்காமலே காட்டுது

விழுந்தவன் எழ நினைத்து தோற்கின்றான்
விடா முயற்சியோடு போராடி நிற்கின்றான்
விஷ்பரூபமாக மதி வெறியாக உருவாகவே
விக்கித்து அஞ்சத்தால் அடிமையாகுது விதி

மதியை தொட்ட விதி இங்கே
மல்யுத்தம் செய்ய முடியாது முடங்குது
மலையாக இருந்தது பஞ்சாகி போனது
மரண அடி அடித்து வென்றது மதி

கவிஞர் ஜஸூரா ஜலீல்

# மலிவு விலைக் காதல்

கூட்டாஞ்சோறு கணக்கா
குவிந்து கிடக்கு. நாட்டிலே.
காட்டாற்று வெள்ளமாய்
கரைபுரளுது நாட்டிலே.



உன் மனைவி கொஞ்சநேரம்
கொஞ்சவேண்டும் கொடுத்திடு.
என் மனைவி வேண்டுமென்றால்
ஆசைத்தீர அணைத்திடு.

பண்டமாற்று முறையில் தானே
பண்டிகையாய்ப் போனது.
பண்பாடு பழக்க வழக்கம்
மண்மூடிப் பார்க்குது!

பிடிக்கும் வரை கட்டிலில்
கணவன் மனைவி வாழ்க்கையை
குடிக்கும் போதை தெளியும் வரை
குடித்தனம் தான் நடக்குது!

மேலை நாட்டு நாகரீகம்
மேனியைத் தான் காட்டுது.
மேயும் பார்வை வக்கிரமம்
மெய்மறக்கச் செய்யுது!

போதைக்காக பேதைப்பெண்ணை
விற்பனைக்கு அனுப்புது.
சீதை எங்கே இருக்கிறாள்?
சிந்தனைத்தான் கேட்குது!

காதல் பேரில்
காவு வாங்கும்
மோதல் தானே
நடக்கு இந்நாட்டிலே!

கட்டிலுக்கும் தொட்டிலுக்கும்
மாறுபாடு தெரிவதில்லை
பட்டித்தொட்டி சுத்தினவன்
சாக்கடையில் விழுகிறான்!

காம நாய்கள்
கண்ட இடத்தில்
மோக வேள்வி
நடத்திக் காட்டுது!

படித்தவன் தான் படிப்புக்கேற்ற
பண்பு தொலைத்தவன்தான்
நடித்தவன் தான் நாளுக்கொரு
வேடம் தரித்து.

கவிஞர் திருமதி மோ.கோமளாநேதாஜி

# உன் அவளும் என் அவனும்

என் மௌனம் வலிக்கிறதா?
என் விழி மொழி புரியவில்லையா?
என் வசனம் சலிப்பளித்தும்
என்னோடே பயணிக்கும் உன்னைதான்.



நீ
நான் கேட்கும் இராநேர இசையின்
மென் கீதம் தான்.
நான் கண்ட பிறையும்
உன் தூதுவன் தான்.

நீ
நிகரில்லா சொப்பனம்தான்.
நினைவே இல்லா சுகம்தான்.
நிசப்தமில்லா அவனியை பரிசளித்த வல்லவன்.
நிறைவேறாத ஆசையும் நீதான்.

நீ
கரம் பிணைப்பில்லாதவன்
காலம் கடத்தி
கலைந்த கனவை தூசி தட்டுபவன்.
கன்னி இவள் காகிதம் தீண்டா
கணாளன் அவன்.

நீ
கசிந்த துளி நிறைந்த திண்டும் நீயே
பிரகாசிக்கும் முறுவலை
கண்ணாடியிலே காணும் விழியும் நீயே.
கலைந்த இமையின்

துயிலில் நிறைந்தவன் நீ
நீ
என் வரிகளின் மொத்த பிழையும் நீ
நிறையும் நீ.

என் பிழையிலும் சின்ன புள்ளியும்
உனக்காக தான்
நான்.

மெல்லிசையில் பிரம்மிப்பவள்.

தேகம்
நோக கலைத்தும்
நின் நகையில் மலரும் இதழ் இவள்.
நீங்கிடா எண்ணத்தை நீ பதிக்க
எண்ணத்தில் குழைபவள்.

நானே தான்.
சண்டை போடாது விழிநீரில் சினம்
கொள்பவள்.
வெறுப்பாய் எண்ணியும்
உன் கரம் கோர்க்க காத்திருப்பவள்.

கவிஞர் ச.கார்த்திகா,பழநி

# எங்கே தேட அந்த ஒரு துளியை?

அகலப்பரந்த வானத்தில்
அமைதியாக விழக்கூடியத் துளி
வந்துக்கொண்டே இருக்கிறது.

தூரலில் கதவினை சாத்திய மனிதனுக்கு
இடி இடித்ததும்
ஆசைவருகிறது சன்னலைத் திறக்க.

கப்பல் விடும் மகனுக்கு
துடுப்பாக செயல்படுகிறார் அப்பா
பாதுகாப்பாய் திட்டி திருக்குறள் அம்மா

வீதியெங்கும் வெள்ளப்பெருக்கு
வீடின்றி கரைகிறது
வாசலில் கட்டப்பட்ட நாய்

எங்கே தேட அந்த ஒரு துளியை
பலர் மிதபட வளைந்து
நெளிந்தோடிய கண்ணாடி வெள்ளத்தில்.



கவிஞர் சே கார்கவி கார்த்திக்

# அரசியல் அரக்கர்கள்



அரசியல் அரக்கர்கள்
அரசியல் மன்றம்
ஆங்காங்கே
ஊர் கூடி தெரு நடுவே
தெரியாமல் அறிய வைத்து
அங்கோர் கொடி பறக்க
ஆணவ சாதி ஒன்று
ஊர் ஊராய் பிரிவு பட்டு
மேலும் கீழும் மேளதாளம் முழங்க.

நீ வேறு நான் வேறு
அரசியல் தான் வழிபாடு
வருடப்பின்னணி காலோடு கை சேரும்.
அரசியல்வாதி முகசுவோடும்
ஐந்தாண்டு நிபந்தனையில்
நீ யார் நான் யார் நீதிக்கும் இடமில்லை.

குடிமக்கள் நிம்மதி இல்லை
ஆற்றோடு போட்டி போடும்
கண்ணீரும் சாப்பாடும்.
கொள்ளைப் பேர் திளைக்கும்
விவசாயி உயிர் நிலைக்கும்
அப்பாவி மக்கள் முகத்திரையில்
அரசியல் முத்திரை.
நீங்காத வேதனையில் நாடும் ஏடும் கையோடு
அரசியல்வாதி புது மாப்பிள்ளை
தினம் ஒரு அரங்கேற்றத்தில்
ஆணவ ஆட்டத்தில், ஊர் ஊராய்.

பூச்சாண்டி புகழ் பறக்க பேருக்கு ஓர் சொற்பொழிவு
வேடமிடா மக்களிடத்தில் நிலைக்காத உதவி ஒன்று
திட்டங்கள் ஏராளம் கண்ணில் காணாத காட்சிகளாய்
நீரும் சோறும் நிலை இல்லை நிம்மதி என்றும் இல்லை.
அரசியல் கூத்தாடி மன்றத்தில் மத்தாப்பு
மாடி வீட்டில் செட்டப்பூ
தொண்டனும் தொங்கி விட்டான்
விலைக்கு அஞ்சி விட்டான்.

மக்கள் பசி தீர்க்க பணம் இல்லை
வழிகாட்ட நிலை இல்லை
வாழ்க்கை தர நிதி இல்லை.
வீணாக்கும் நிபந்தனையில் ஏராள திட்டங்கள்
கொள்ளையடிக்கும் சட்டங்கள்.

கல்விக்கும் கண்கள் இல்லை
காலத்திற்கும் கண்கள் இல்லை
விலைக்கே கண்கள் உண்டு
விஞ்ஞான அரசியல் கண்டு.
பாதுகாப்பு பார்க்குமே
படைக்கலாம் பார்க்குமே
பாமர மக்கள் தோற்குமே
(ஏமாற்றும் கூட்டத்திலே
குடிமக்கள் சுடுகாட்டினிலே)

காலத்தில் காலம் முழுவதும் தொடரும் .

கவிஞர் ம.செல்லமுத்து,நூத்தப்பூர்

# உதிராத காதல்

மலர்ந்த பூவை
காத்திருந்து கைப்பிடித்த
தாய்மாமன்

நான் நீ என்ற அகங்கார
எல்லைக்கோட்டை அழித்து
காதல்சிகரத்தைத் தொட்டவர்கள்

ஈருடல் ஓருயிராய் வாழ்ந்த
இருவாட்சிப் பறவைகள்

குழந்தைகள் பெயரையும்
உறவுகள் பெயரையும்
மறதியெனும் பெட்டிக்குள் பூட்டி
சாவியைத் தொலைத்தவர்

இல்லாளின் பெயரை மட்டும்
உச்சரிக்க மறக்காமல்
காதல் விதைகளை
காற்றில் பறக்கச் செய்த கண்ணன்

சிறுகுழந்தையாய் மாறிக்
காலமெனும் தொடர்வண்டியில்
இறங்கிக் கொண்டு சென்றது
அவரது உயிர் மட்டுமா?



கவிஞர் ஸ்ரீவி.முத்துவேல்

# விதைத்தேன்! வியந்தேன்!

வேதியன் தந்த
வேதியியலை என் மனதில்
விதைத்தேன் அதில்
விளைந்தேன்
அனைத்திலும் வேதியன்
வேர் ஊன்றி இருப்பது போல
வேதியியலும் வேர் ஊன்றி
இருப்பதைப் பார்த்து
வியந்தேன்!
வியந்தேன்!




கவிஞர் முனைவர் க குமார்,சித்தாலிக்குப்பம்

# தாய் மடி போல வருமா!

கால் கடுக்க நடந்தாலும்
கூழ் குடித்து நிம்மதியாய்
குடும்பம் புடைசூழ
கதை பேசி நாமும்
களிப்போடு தலை சாய்த்து
கவலை மறந்து கண்ணுறங்கிட
தாய் மடி போல வருமா.



வந்த துன்பம் எதுவாயினும்
வைப்பில் தான் பத்துக்காசு
இல்லை யென்றாலும்
வெந்த உலையில்
வெறுங் கிழங்கானாலும்
உண்டு உறங்கிட
தாய் மடி போல வருமா.

வயல் வரப்பில் களையகற்றி
கேழ்வரகு சோளம்
கம்பென்று வியர்வை சிந்தி
களம் காத்து பழஞ்சோறு
பிசைந்துண்டு பிணி தீர
படுத்துறங்கி விழித்தெழுந்த
தாய் மடி போல வருமா.

பகலிரவாய் உழைத்திங்கு
பரனேறிப் பயிர் காத்து
உற்றார் உறவோடு
திணை காத்து தன்னொளி
நிலவொளியில் மனைகாத்து,
நிம்மதியாய் துயில் கொள்ள
தாய் மடி போல வருமா.

விற்றகாசு எண்ணிச்சேர்த்து
விறகடுப்பில் புகையூதி
சோறு வடித்து
சொந்தக்கதை சோகக்கதை
ஆனாலும்
தலை கோதிக் தாலாட்டி
தலையணை சுகம் காண
தாய் மடி போல வருமா!

கவிஞர் ஷெண்பகச் சோலையாள் ஆய்ஷ்,இலங்கை

# கவிதைத்துளி

## விடுகதை வாழ்க்கை

விண்கலம் செலுத்தும் நாட்டில்
மலக்குழி சாவுகள் தொடர்கதை
விடுகதை வாழ்க்கை!

*****

## வரம்பற்ற கட்டணம்

நெடும்பயணத்தில் புத்துணர்ச்சி
நெடுஞ்சாலை கடை தேநீர்
நெஞ்சை இறுக்கும் கட்டணம்

*****

## விடியல்

விண்கலம் விடும் நாட்டில்
விளிம்பு நிலை மக்கள்
விடியல் தேடி !



கவிஞர் செ.தமிழ்நேயன்,தமிழ்நாடு

# நினைவின் மடல்

தன் தலைவனிடம் கதைக்க
ஓராயிரம் வார்த்தைகள் இருந்த போதும்.

அவன் திருமுகம் கண்ட
அந்த ஓர் நொடியில்

அவன் விழிப் பார்வையில்
தன்னை தொலைத்த அந்த ஓர் நொடியில்



அவளுள் அமிழ்ந்து போன
அந்த வார்த்தைகளை

அவளின் நேசத்தை
அவளின் விருப்பங்களை

அன்னப் பறவையின் வெண்மை எடுத்து
நெய்த துணியில்

மயில் தோகை கொண்டு
அவளின் விழியில் தீட்டும் மையில் தோய்த்து

ஆத்மார்த்தமான மடல் ஒன்றை வரைந்து
வெண்புறாவின் மூலம் தூது விடுத்து

காத்திருக்கிறாள் அவன்
நினைவில் தவிக்கும் அவனவள்

கவிஞர் ரதி ஜெயராஜ்,தென்காசி

# வினைத்தொகை

இறந்தகால
மாற்றங்களில்
நனைந்து
எதிர்கால
ஆசைகளில்
உருவாகும்
பிரமாண்ட
கப்பல்களின்
மகிழ்ச்சியை
நிகழ்காலத்தில்
கொண்டாடி விடுகின்றன
குழந்தைகளின்
காகித கப்பல்கள்.



கவிஞர் அன்னலட்சுமி சரவணன்,ஈரோடு

# இவள் சிரிப்பு

இளமையில் மின்னும்
இளந்தென்றல் வாசம்

கொஞ்சும் சலங்கையின்
நாதமென
குமரியிவள் சிரிப்பில்
பொங்கிடும் மனமும்



ஓரவிழிப்பார்வையில்
உயிர்க்கும் நேசத்தில்
இவள் வசம் தொலையும்

இளஞ்சிரிப்பு இதயம்
நிறைத்து
இன்னிசை படிக்கும்

மனதோடு உறவாடும்
மறந்தும் போகுமா
காந்தபுன்னகையின் கவிதை
தோப்பை

துயில் கலைக்கும் துரிதம்
விழி மீட்டும் மின்னல்

கவிஞர் கனகசுந்தரி பாஸ்கரன்,திருப்பூண்டி

அகர முதல இலக்கிய பேரவை
அகமும் தமிழே!
முகமும் தமிழே!!

# சேக்கிழார் (தொடர்ச்சி-06)-தொகையடியார்கள்

சைவசமயக் குரவர்கள் நால்வரவர்: சம்பந்தர்
சீர்அப்பர் சுந்தரரும் நாயனாரிலா மணிவாசகர்
என்போரே! நாயன்மாரில்: அரசமரபு அந்தணர்கள்
வணிகர்கள் வேளாளர் ஆதிசைவர் மரபினுக்கு
ஒருவரென மரபெதுவும் கூறப்படா தோரென்றே
ஏழ்தரத்தோர் உண்டென்பர்! சேரத்தார் நல்லிருவர்
சோழர்களோ முப்பத்து ஏழாவர் தொண்டைசார்
எண்மரென நடுநாட்டார் எழுவரொடு பாண்டியர்கள்
ஐவராக மலைநாடர் இருவரென வடக்கமைந்த
இருவரொடு அறுபத்து மூவரென அறிகின்றோம்!
தொகையடியார்: திருத்தொண்டத் தொகையெழுதுமுன் எழுதுங்கால்
எழுதியபின் வாழ்ந்திருந்த சிவனடியார் தமைப்பற்றிச்
சாற்றுவதாம்! தொகையடியார்: திருவிசைப்பா பாடிட்ட
ஒன்பதின்மர் ஆவாரே! திருமாளிகைத் தேவரொடு
சேந்தனாரும் கருவூரார் பூந்துருத்தி நம்பியான
காடநம்பி கண்டராதித் தப்பேரார் சேணாட்டு
அடிகளொடு திருவாலி யமுதனாரும் புருடோத்தம
நம்பியொடு சேதிராயர் தொகையடியார் ஒன்பதின்மர்
என்றுரைப்பர்! தொகையடியார் ஒன்பதுபேர்: தில்லைதனில்
கூத்தர்தமை வழிபாடு செய்கின்ற அந்தணர்கள்
சங்கத்துப் புலவர்களாம் நாற்பத்து ஒன்பதின்மர்
ஆரூரான் வழிபாடு செய்தவர்கள் சிவன்தன்னை
மட்டிலுமே பூசித்தோர் சிவயோக நெறிபற்றி
முக்திபெற்றோர் கயிலாய சிவகணமாம் ஆரூரில்
பிறந்தவர்கள் முப்பொழுதும் அபிஷேக அர்ச்சனைகள்
புரிவோர்கள் மெய்யெல்லாம் நீறுபூசி சிவனையே
பூசிப்போர் தமிழகத்தின் அப்பாலும் வாழ்கின்ற
சிவனடியார் என்றவகை ஒன்பதின்மர் தொகையடியார்
என்றமைவர்! சேக்கிழார்தம் பெரியபுரா ணஞ்சாற்றும்!
பக்தியினால் பணிந்தோங்கி சிவநெறியில் திளைப்போமே!




(சேக்கிழார் தொடர் முற்றும்)

கவிஞர் கணக்காயன் (இ. சே.இராமன்)

# வெண் புறா!

சமாதான சின்னமாய்
வெண்புறாவே பறந்து வா

கொலை வெறியை அடக்கிட
வெண்புறாவே பறந்து வா

இரத்த பெருக்கை வற்ற வைக்க
வெண்புறாவே பறந்து வா

போர் கொடிகளை வீழ்த்திட
வெண்புறாவே பறந்து வா

தீரா பகையை தீர்த்திட
வெண்புறாவே பறந்து வா



உறவுகளை ஒன்று சேர்க்க
வெண்புறாவே பறந்து வா

ஒற்றுமையாய் கைகோர்க்க
வெண்புறாவே பறந்து வா

மனித நெஞ்சம் அமைதிக்காண
சமாதான கொடியை கொண்டு வா

கவிஞர் அகீலா ஜவுபர்,ஏத்தாளை புத்தளம் இலங்கை

# கையறுக்குள் நானோர் கைதி

உலக மேடையில் எனக்கான கதாநாயகன்;
வாழ்வியலில் எனக்காய் திணிக்கப்பட்ட வரம்;
என் அகவைக்குச் சொந்தமான உறவுகளின் தராதரம்;
ஒட்டுமொத்தமும் என் இன்றைய வாழ்வின்
சக்கரங்களாய் பொருத்தப்பட்டுவிட்டன.

அவாக்கள் அடுக்கடுக்காய் ஒளிராமல் ஒழிக்க;
இயலாமை விழிகளும் என்னோடு தனிமையில் கதை பேச;
இசைவை அக்கணம் திணிக்க நாதியற்றவளாய் ,
இறை பொறுப்பில் அனைத்தையும் சாடியவளாய் ,
நானோ பயணிக்கிறேன்
என்னான வாழ்க்கைப் பாதையில்.

எதிர்பார்ப்புக்கள் அளவின்றி உதிக்க;
நம்பிக்கையும் கூடவே பிறக்க;
எதிர்கால நாழிகைகளை அவற்றுக்காய் உரிமையளித்தவளாய்,
இன்று எனும் எனதான நிகழ்காலம்
என் நிழலோடு நிஜமாகிக் கொண்டிருக்கிறது.

பொது விருப்பை சுய விருப்பாய் ஏற்று
வெளி உலகின் இயலாமைக்கு
முற்றுப்புள்ளியிட எனக்கும் ஆசைதான்,
ஆனாலும் வர்ணிக்க முடியா மௌன மொழிகளே
என்னான மனத்தே எதிரொலிப்பனவாகிவிட்டன.

எண்ணவோட்டங்கள் எண்ணிலடங்காதவை;
உறவு வட்டாரங்களும் உருப் பெருத்தவை;
சங்கடம் உரைக்கவும் சொற்களுக்கும் பஞ்சமன்று;
இருந்தும் மௌனிக்கிறேன்
திக்கற்றவனுக்கு தெய்வமே துணை என்று.



கவிஞர் பேனாமுனைக் காதலி -ஹாஸ்

# கிருபானந்த வாரியார்

25-08-23 பிறந்த நாள்

நம் தமிழ்நாடு கண்ட தனிப்பெரும்
சிவநேசச் செல்வர் டாக்டர் திருமுருக கிருபானந்த
வாரியார் சுவாமிகள்.
64ஆவது நாயன்மாராக போற்றப்படுபவர்
எட்டுத்திக்கும் மதிக்கும்படி புகழ் மணம் கமழ
வாழ்ந்திருந்தவர் வாரியார் அவர்கள்.
தமக்கென்று வாழாமல் பிறர்க்கென்று வாழ்ந்திருந்தவர்.
மக்கள் தொண்டே மகேசன் தொண்டாக வாழ்ந்திருந்தவர்.
பத்தொன்பது அகவையிலே சிவத் தொண்டே
தலையாய கடமையாக அறநெறியே போதித்து
தம் இறுதி நாள் வரை பட்டித் தொட்டியில் உள்ள
மக்களுக்கும் போய் சேர வேண்டும் என்று
அயராது பாடுபட்டவர், சொற்பொழிவு மூலம்
திருமுருகனின் அருளை பெற்று அவர்
தம் திருப்பணிகளை செவ்வனே செய்தவர்.
பல அறப்பணிகள் செய்தவர்.
அறநெறி நூல்கள் பலவற்றை எழுதியவர்.
சேக்கிழாரின் ' பெரிய புராணத்தை' அடியேன் படிக்கவில்லை.
ஆனால், சுவாமி கிருபானந்த வாரியாரின்
எளிய நடை பெரிய புராணத்தை
படித்து தெளிவு கண்டேன்.
64 ஆவது நாயன்மாராக கொண்டாடப்படுபவர்
" மெய்யுணர்வு என்று வகையில்
சுவை, ஒளி ,ஊறு, ஓசை, நாற்றம் என்ற
ஐந்தையும், நாக்கு, கண், உடம்பு, செவி, நாசி
என்ற கருவிகளால் அறிய வேண்டும்".
இறுதியாக அவர், " என்னுடைய உள்ளம், உணர்வு
நாடி, நரம்பு எல்லாம் சேர்ந்து அனுபவ
வசனமாக இதைக் கூறுகின்றேன்". இதை
எல்லோரும் கடைபிடியுங்கள் என்றார்
பிறந்த பிறவியின் பயனை பெறலாம்.
என்னை அவரின் மகிமை!



கவிஞர் கிருஷ்ணவேணி. ஆ,ஊத்தங்கரை

# கொசு

அழகான இரவு
அமைதியான பொழுது
வான வீதியில் உலாவரும்
வட்டமான நிலவு .

வெப்பத்தை தணிக்கும்
தென்னை மரக் காற்று
அசைந்தாடும் தென்றலென
அரசமரக் காற்று.

இரவில் மடியில்
இதமான இன்னிசையில்
இனிதான உறக்கம்.



கண்மூடி சற்றே நான் உறங்க
எங்கிருந்தோ வந்தது
காதோரம் ரீங்காரமாய்
ஒரு இ(ம்)சை
தொடர்ந்து வந்தது
தூக்கம் கலைத்தது.

தினம் தினம் இரவினில்
உன்னுடன் போர்களம் தான்
பல ஆயுதங்கள் கையில் எடுத்தும்
உன்னை வெல்ல எவருமில்லை.

எதிரியாக இருந்தாலும்
மானம் அவமானம் பார்க்காது
மீண்டும், மீண்டும் முகம் காட்டி
மறைந்து போகிறாய்.

என்மீது அன்பு செலுத்த
உன்னை போல் யாரும் இல்லை இவ்வுலகில்.

கவிஞர் குணசுந்தரி சிவா,காஞ்சிபுரம்

# அர்த்த ஜாமம்!

கிழக்கே உதித்த
சூரியனும் மேற்கில்
மறைகிறான்
மாலைப் பொழுதினிலே!
இருள் வண்ணம்
காண பயந்த
பறவைகளும்
திரும்பி விட்டன
தத்தம் கூடுகளுக்கு,
களைத்துப் போன
அன்னையரும் அவர்
தம் பிள்ளைகளும்
கண் அயர்ந்து
சில மணி
நேரங்களேனும்
உறக்கத்தில் தங்களைப்
புதைத்துக் கொள்ள ;
பகல் முழுவதும்
தன் முழு சக்தியையும்
நம்மைக் காக்க எனவே
செலவிட்ட அன்னை
பார்வதி தேவியும்
காத்திருக்கிறாளோ
ஈசன் திருவடி
தன்னை நாடி வரும்
அர்த்த ஜாமப் பொழுதுக்காய்
படைப்பின் மொத்த
சூட்சுமத்தையும் பக்தருக்கு
சொல்வதற்காய் !



கவிஞர் மலர் அபி

# உறங்காத விழிகள்



அன்னையவள் தன்மகவை
அரவணைத்துப் பாலூட்டி
கண்வளரச் செய்திடவே
தன்தூக்கம் துறந்திடுவாள்!

தேர்வுக் காலத்தில்
தேர்ச்சி பெறவேண்டி
உறக்கம் தொலைத்து
சோர்ந்திடுமே விழிகள்!

மனக்கவலை மிகும்போது
இனம்புரியா வலியாலே
உறங்காது விழிகள்!

அளவில் மிகும்போது
சேர்த்த செல்வத்தைக்
காத்திடவே கலக்கம்!
வாராது கண்ணுறக்கம்!

வயது மூப்பினால்
நோயின் தாக்கம்!
இரவு முழுவதும்
இல்லையே தூக்கம்!

பருவ வயதில்
அரும்பிடும் காதலால்
ஏக்கம் மிகுந்திடும்!
தூக்கம் தொலைந்திடும்!

வெளிநாட்டில் வேலையென
வீட்டைப் பிரிந்திருப்போர்
நாடு திரும்பும்வரை
நல்லுறக்கம் தொலைத்திருப்பர்!

உறவுகளின் மறைவால்
தீராத சோகத்தால்
வாராது தூக்கம்!

இல்வாழ்வில் தம்பதியர்
சிலநாட்கள் பிரிந்திருந்தால்
சேர்ந்திடும் நாளையெண்ணி
உறக்கமின்றித் தவித்திருப்பர்!

இரவுகள் தினம்வருமே!
பருவங்களுக் கேற்றபடி
உறங்காத விழிகளுக்குக்
காரணங்கள் பல்வேறாய்!

கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி


# வண்ணங்களும் எண்ணங்களும்

இயற்கையோடு ஒன்றியே
இன்பம் பிறக்க
பயத்தைப் போக்கவே
பகுத்தறிவு வளர்க்க

வண்ணத் தூரிகைபோல்
வடிவாக மாற்றிட
எண்ணத்தின் எழிலை
எப்போதும் அறமாக்குவோம்

ஈதல் இதயமே
வெண்மதி நிலப்போல்
நலலதைப் பயிரிட்டு
நலன்கள் பெற்றிட

பேச்சில் வெள்ளமாய்
தித்திக்கும் நாவோடு
கரத்தால் அள்ளியே
கனிந்து பகிர்வோம்



தீயதைத் தீண்டாது
தீயினில் போட்டே
மாயையை விட்டு
மனிதராய் வாழுவோம்

கவிஞர் கிருஷ் அபி



அகர முதல

# பணம் + குழந்தை + நிம்மதி



குழந்தைங்களுக்கு சின்ன சின்ன தேவைகள்தான் இருக்கும். நேரத்துக்கு சாப்பாடு தூக்கம் அதுக்கு வந்து காசு பணத்தோட மதிப்பு அவங்க கண்களால பாக்கற பொருளைதான் பெருசா நினைப்பாங்க. அதாவது பணம் இல்லாம நம்ம சந்தோசத்த வாங்க முடியாது. அது உண்மைதான் ஆனா அந்த பணத்தால அந்த பொருள தான் வாங்க முடியுமே தவிர, சந்தோசத்தை வாங்க முடியாது.

ஆனா நம்ப கிட்ட பணமே இல்லனாலும் நம்ம கிட்ட என்னோ இருக்கோ அத வச்சிக்கிட்டு நம்மளால நிம்மதியா இருக்க முடியும். எல்லாமே மனசுதான் காரணம் போதும்குற மனசு இருந்த நாம சந்தோசமா வாழ முடியும். பணங்குறது முக்கியமானதுதான் பணம் இருந்தா மட்டுமே சந்தோசமா இருக்க முடியுங்கறது கிடையாது பணம் இருந்தாலும் சந்தோசமா இருக்கலாம். ஆனா பணம் இல்லனாலும் நம்ம கிட்ட என்ன இருக்கோ அத நம்ம மனசு ஏத்துக்கிச்சுன்னா நம்ம சந்தோசமா இருக்கலாம். அத விட்டு எனக்கு இது மாறி வேணும் அந்த மாறி வேணும்குறவங்கதான் நிம்மதி இல்லாம இருப்பாங்க. பணம் இருக்குறவங்க எத்தனையோ பேரு நிம்மதி இல்லாமதான் இருக்காங்க இது நாம ஒத்துக்கிட்டுதானே ஆகணும். பணம் இருக்குறவங்க எத்தனையோ பேரு தூக்கம் இல்ல அது இல்ல தூக்கம் மாத்திரை போட்டு இத பண்ணிட்டு அத பண்ணிட்டு இருக்காங்க. ஆனா பணம் இல்லாதவன் நிம்மதியா படுத்து தூங்குறான். அதனாலே எல்லாம் நம்ம மனசுதான் காரணம். அதிகபடியான எதிர்பார்ப்புகளும், ஆசைகளும்தான் நம்மள கஷ்டத்துக்கு ஆளாக்கும். பணக்காரங்களுக்கு அத காப்பாத்திக்கணுமேன்னு ஆசை. இல்லாதவங்க அத சம்பாதிக்கணுமேனு ஆசை. இவ்வளவுதான், இடையில நடக்குற போராட்டங்கள்தான் வாழ்க்கை. அதுல நம்ம கிட்ட இருக்குறது போதும்னு நினைக்குறவங்க எப்போதுமே சந்தோசமா இருப்பாங்க. போதும்குற மனசுதான் முக்கியமே தவிர, பணத்தால பொருளை மட்டும்தான் வாங்க முடியும். நேரடியான சந்தோசத்தை வாங்க முடியாது. அத நம்ம கிட்ட இருக்குற சின்ன பொருளை வச்சி கூட நாம நினைச்சா சந்தோசமா இருக்கலாம்.

ராஜேஷ் தமிழன், ஆதிக்குடிக்காடு

# தமிழறிஞர் க.வெள்ளை வாரணனார்

## கட்டுரை

### பிறப்பு வளர்ப்பு



தஞ்சை மாவட்டம் குடந்தை அருகிலுள்ள திருநாகேசுவரத்தில் கந்தசாமி முதலியார் - அமிர்தம் அம்மையார் தம்பதியருக்கு 1917ம் ஆண்டு ஜனவரி 14ம் தேதி வெள்ளைவாரணனார் பிறந்தார். தம் இளமைக் கல்வியை திருநாகேசுவரத்தில் கற்ற பின்பு திருப்பெருந்துறை மாணிக்கவாசகர் தேவாரப் பாடசாலையில் மாணாக்கராகச் சேர்ந்து திருமுறைகளை இசையோடு கற்றுத் தேர்ச்சி பெற்றார்.

பின்னர் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் வித்துவான் படிப்பில் சேர்ந்து 1935 இல் வித்துவான் தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். 1935-37 இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஆய்வு மாணவராகச் சேர்ந்து, 'தொல்காப்பியம் - நன்னூல் எழுத்ததிகாரம் ஒப்பீடு' என்னும் ஆய்வேட்டினை எழுதி முடித்தார்.வெள்ளைவாரணனார் 1938 முதல் 1943 வரை தஞ்சாவூர் கரந்தைத் தமிழ்க் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணிபுரிந்தார். 1939 ஆம் ஆண்டு பொற்றடங்கண்ணி அம்மையாரை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றார்.

### பணி

1943 இல் வெள்ளைவாரணனார் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் விரிவுரையாளராகச் சேர்ந்தார்.

1962 இல் இவரின் புலமை நலனைக் கருத்தில் கொண்டு விதிகளைத் தளர்த்தி பல்கலைக்கழகம் இவருக்கு இணைப்பேராசிரியர் பதவி வழங்கியது.

1977 ஆம் ஆண்டு துறைத்தலைவர் பொறுப்பை ஏற்றார். பல்கலைக்கழக ஆளவை மன்றம், ஆட்சிக்குழு ஆகியவற்றில் உறுப்பினராகவும் பணிபுரிந்தார். தம் 62 இம் வயது வரை அங்குப் பணியாற்றி 1979 இல் ஓய்வு பெற்றார்.


1979 முதல் 1982 ஆம் ஆண்டு வரை மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் சிறப்புப் பேராசிரியராகவும், துறைத்தலைவராகவும் பணியாற்றினார்.

## நூல்கள்

விபுலானந்தரின் யாழ் நூலுக்கு இவர் எழுதியுள்ள முன்னுரை இவரின் இசைப் புலமைக்குச் சான்றாக அமைந்துள்ளது. வெள்ளைவாரணனார் எழுதிய நூல்கள் சில

இலக்கண நூல்கள்

- தமிழ் இலக்கிய வரலாறு - தொல்காப்பியம்
- தொல்காப்பியம் - நன்னூல் எழுத்ததிகாரம்
- தொல்காப்பியம் - நன்னூல் சொல்லதிகாரம்
- தொல் - பொருள் உரைவளம் (ஏழு தொகுதிகள்)
- சங்க இலக்கியம் சார்ந்த நூல்கள்
- குறிஞ்சிப்பாட்டாராய்ச்சி
- சங்ககால தமிழ் மக்கள்
- சைவ சமயம் சார்ந்த நூல்கள்
- திருவுந்தியார்
- திருக்களிற்றுப்படியார்
- சேக்கிழார் நூல்நயம்
- பன்னிரு திருமுறை வரலாறு
- தில்லைப் பெருங்கோயில் வரலாறு
- திருவருட்பாச் சிந்தனை




## உரை நூல்கள்

- தேவார அருள்முறைத் திரட்டுரை
- திருமந்திர அருள்முறைத் திரட்டுரை
- திருவருட்பயன் விளக்கவுரை

## பிற

காக்கை விடு தூது என்னும் படைப்பிலக்கியத்தையும்,இசைத்தமிழ், நாடகத்தமிழ் சார்ந்த நூல்களையும் எழுதியுள்ளார். இவரது நூல்களுள் சில நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன.

## நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள்


- அற்புதத் திருவந்தாதி
- இசைத்தமிழ்

# தமிழறிஞர் க.வெள்ளை வாரணனார்

**கட்டுரை**

## நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள்

- காக்கை விடு தூது
- பன்னிரு திருமுறை வரலாறு
- பன்னிரு திருமுறை வரலாறு - இரண்டாம் பகுதி
- சைவ சித்தாந்த சாத்திர வரலாறு
- சங்ககாலத் தமிழ் மக்கள்
- தில்லைப் பெருங்கோயில் வரலாறு
- திருமந்திர அருள்முறைத் திரட்டு
- திருத்தொண்டர் வரலாறு
- திருவருட்பாச் சிந்தனை
- திருவுந்தியார் திருக்களிற்றுப்படியார்
- தொல்காப்பியப் பொருளதிகார ஆய்வு
- தொல்காப்பியம் களவியல் உரைவளம்
- தொல்காப்பியம் கற்பியல் உரைவளம்
- தொல்காப்பியம் மெய்ப்பாட்டியல் உரைவளம்
- தொல்காப்பியம் நன்னூல் - எழுத்ததிகாரம்
- தொல்காப்பியம் நன்னூல் - சொல்லதிகாரம்
- தொல்காப்பியம் பொருளியல் உரைவளம்
- தொல்காப்பியம் புறத்திணையியல் உரைவளம்
- தொல்காப்பியம் உவமையியல் உரைவளம்
- தொல்காப்பியம் வரலாறு
- திருவருட் பயன்
- தொல்காப்பியம்-செய்யுளியல் உரைவளம்
- தொல்காப்பியம்-மரபியல்-உரைவளம்
- கவிதை நூல்கள்.




## விருதுகள்

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் இவருக்கு 1985 இல் கலைமாமணி விருதை வழங்கியது. தமிழ் நாட்டிலுள்ள பல்வேறு இலக்கியம் மற்றும் சமய அமைப்புகளும், பல்கலைக்கழகங்களும் வெள்ளைவாரணனாருக்குப் பல்வேறு விருதுகளை வழங்கி பெருமை சேர்த்துள்ளன.

- சித்தாந்தச் செம்மல்
- திருமுறை உரைமணி
- தமிழ்மாமணி
- தமிழ்ப் பெரும்புலமைச் சான்றோர்
- செந்தமிழ்ச் சான்றோர்
- சிவகவிமணி

## விருதுகள்


தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் இவருக்கு 1985 இல் கலைமாமணி விருதை வழங்கியது. தமிழ் நாட்டிலுள்ள பல்வேறு இலக்கியம் மற்றும் சமய அமைப்புகளும், பல்கலைக்கழகங்களும் வெள்ளைவாரணனாருக்குப் பல்வேறு விருதுகளை வழங்கி பெருமை சேர்த்துள்ளன.

- சித்தாந்தச் செம்மல்
- தமிழ்ப் பெரும்புலமைச் சான்றோர்
- திருமுறை உரைமணி
- செந்தமிழ்ச் சான்றோர்
- தமிழ்மாமணி
- சிவகவிமணி
- திருமுறைத் தெய்வமணி
- தமிழ்ப் பேரவைச் செம்மல்

ஆகிய விருதுகள் பல்வேறு ஆண்டுகளில் இவருக்கு வழங்கப்பட்டன.

## மறைவு

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும்போது உடல் நலம் குன்றியது. எனவே தில்லை சென்று தங்கி வாழ்ந்திருந்த வெள்ளைவாரணனார் 1988 ஆம் ஆண்டு ஜூன் 13 ஆம் நாள் இவ்வுலகை விட்டு மறைந்தார்.




தமிழ்மாமணி க.வெள்ளைவாரணனார் நூற்றாண்டு விழா

நன்றி : https://senguntharmudaliarhistory.blogspot.com
https://www.tamilvu.org/library/nationalized


அகர முதல
நாளை நமதே
அகர முதல
உரக்க சொல்வோம்
எங்கு உனக்கு
கேள்வி கேட்க
உரிமையில்லையோ
அங்கு நீ
அடிமைபடுத்துப்படுகிறாய்...
Aagaramuthalaa
www.அகரமுதல.com

**அகமும் தமிழே!** **முதலும் தமிழே!!**

**"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு**
**தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு**
**கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு**
**காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"**

**என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,**

**அகர முதல செய்திக்குழு | அகர முதல இலக்கிய பேரவை**
**அகர முதல கல்விக்குழு | சிவம் அறக்கட்டளை.**


**தொடர்பிற்கு:**

**9597887847/8870884969**

www.அகரமுதல.com

Aagaramuthalaa

aagaramuthala@gmail.com